**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ம் நாள் திங்கட்கிழமை**
**I.A.No.07/2026 In O.S.No.59/2022**

சிவக்குமார் ... மனுதாரர்/பிரதிவாதி

**//எதிராக//**

பிச்சைமுத்து ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 07.03.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.அருண்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.ஜெயராமன் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

தாவா வழக்கினை மறுதிறவு செய்யக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் இவ்வழக்கின் பிரதிவாதி. இவ்வழக்கில் வாதி குத்தகைக்கு இருப்பதாகவும், தன்னை சொத்தில் இருந்து சட்டப்படி வெளியேற்ற வேண்டுமென கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் வாதி தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக 04.02.2026 ல் வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றைய தினம் மனுதாரர் தனது உறவினர் இறந்து விட்டதால் நீதிமன்றத்திற்கு வர இயலாமல் போய்விட்டது. பின்னிட்டு தனது வழக்கறிஞரை சந்தித்த போது தான் 04.02.2026 ல் தனது தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்ட விபரம் தெரிய வந்தது. இவ்வழக்கில் மனுதாரருக்கு நல்ல எதிர்வாதம் இருப்பதாகவும் எனவே தனது தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறவு செய்யக்கோரி சாட்சிய விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமென இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>**

2) மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் பொய்யானது. பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக 04.02.2026 அன்று வாய்தா போடப்பட்டிருந்த போது வேண்டுமென்றே மனுதாரர் நீதிமன்றத்திற்கு வராமல் இருந்து விட்டு தற்போது இவ்வழக்கை காலதாமதம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் எவ்வித காரணமும் இல்லாமல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

4) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் 04.02.2026 அன்று முடிக்கப்பட்ட தன் தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறவு செய்யக்கோரி மனு தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி மனுவிற்கு ஆட்சேபணை செய்யப்பட்டது. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில், 04.02.2026 அன்று பிரதிவாதி தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ததால் அவர்களது சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிக்கு தன் தரப்பில் நல்ல எதிர்வாதம் இருப்பதாகவும் எனவே மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்க வேண்டுமென கோரி வாதிட்டார். மனுவில் தனது உறவினர் இறந்து விட்டதால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என கூறியுள்ள காரணம் ஏற்கத்தக்கதாக உள்ளது. எனவே மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இம்மனுவானது நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்படலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக**

இம்மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ரூ.500/-ஐ செலவுத்தொகையாக 13.03.2026 ம் தேதிக்குள் வழங்க வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடியாகும் என உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 16.03.2026

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI
Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

R TAMILARASI
Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

*********************************

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**

**I.A.No. 07/2026**
**in**
**O.S.No. 59/2022**

**DRAFT / FAIR ORDER**

**D.D.16.03.2026**

*********************************